## பொருளாதார சமூக நலன்புரிச் செலவுகள்

வலு

எரிபொருள்துறை தொடர்பான பிரச்சினைகள் 1982 இல் மேலும் வலுவடைந்தன.

1982 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் மொத்தப் பெறுமதி ரூ. 121,520 இலட்சமாக விளங்கி இறக்குமதி மீதான மொத்தச் செலவில் 29 சதவீதத்திற்கு வகைகூறியது. இறக்குமதி அளவில் ஏற்பட்ட அதிகரிப்பையும் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாற்றங்களினையும் எடுத்துக் காட்டும்வகையில் 1982 இல் பெற்றோலிய இறக்குமதிகளின் ரூபாப் பெறுமதி 22 சத வீதத்தால் அதிகரித்த வேளையில் சிஎஉ நியதிகளில் இது 1981 ஆம் ஆண்டின் எண் தொகையைக் காட்டிலும் 20 சத வீதங்கொண்டதொரு அதிகரிப்பினைக்காட்டியது. பெற்றோலிய இறக்குமதிகட்காக செலவு செய்யப்பட்ட தொகை 1981 ஆம் ஆண்டில் பெற்றோலியம் அல்லாத ஏற்றுமதி வருவாய்களின் 56 சத வீதத்துடன் ஒப்புநோக்குமிடத்து 1982 ஆம் ஆண்டில் 67 சதவீதத்தை ஈர்த்தெடுத்தது. ஏற்றுமதி செய்யப்படக்கூடிய எண்ணெய் உற்பத்திகளாக பாரடீசல், நப்தா போன்றன பெருமளவில் உள்நாட்டில் நுகரப்பட்டதன் காரணமாக ரூபா' சிஎஉ நியதிகளின் பெறுமதி அடிப்படையில் முறையே 3,4 சத வீதத்தால் குறைவடைந்தமையால் கடந்தசில ஆண்டுகளாக படிப்படியாக உயர்ந்துவந்த பெற்றோலிய ஏற்றுமதிகளின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. இந்த இழப்பு இலங்கை வளமாக்கித் தயாரித்தல் கூட்டுத்தாபனம் உற்பத்திக்கு நப்தாவை முதன்மை உள்ளீடாக பயன்படுத்தி, யூரியாவை ஏற்றுமதி செய்தமையின் வாயிலாக ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டது. அத்துடன் இவ்வாண்டுக் காலத்தில் யூரியா எதுவும் இறக்குமதி செய்யப்படவில்லை. மொத்த ஏற்றுமதி வருவாய்களில் எண்ணெய்க்கான தேறிய இறக்குமதிச் செலவு 1981 ஆம் ஆண்டின் 32 சதவீதத்திலிருந்து நடைமுறையாண்டில் 41 சத வீதமாக உயர்வடைந்தது.

1981 ஆம் ஆண்டின் 1 சத வீதத்துடன் ஒப்புநோக்குமிடத்து பெற்றோலியத்தின் நுகர்ச்சி 5 சத வீதத்தால் மிதமாக அதிகரித்துள்ளது. தனியார் உந்து ஊர்திகளின், உந்து ஈருளிகள் ஆகியவற்றின் அதிகரிப்பு, பெற்றோல் விலைகள் நிலையாக இருந்தமை என்பன 1982ம் ஆம் ஆண்டில் நுகர்ச்சியின் உயர்ந்த மட்டத்திற்கு உதவியது. கடந்த சில ஆண்டுகளாக மண்ணெண்ணெய் நுகர்ச்சியில் காணப்பட்டுவந்த வீழ்ச்சிப்போக்கு மாற்றமடைந்துள்ளமை புலப்படுகிறது. நடைமுறையாண்டில் மண்ணெண்ணெய் மீதான நுகர்ச்சி 3.5 சத வீதத்தால் உயர்வடைந்துள்ளது. 1980 ஆம் ஆண்டில் 14 சத வீதத்திலிருந்து 1981 ஆம் ஆண்டில் 6 சத வீதமாக வீழ்ச்சியடைந்த தன்னியக்க டீசலின் நுகர்ச்சியின் வளர்ச்சி வீதம் நடைமுறையாண்டில் 5.5 சதவீத வளர்ச்சி வீதத்தைப் பதிவுசெய்தது. இலங்கை மின்சபை வெப்ப மின்னை கூடுதலாக உற்பத்தி செய்தமையின் காரணமாக என்றுமில்லாதவாறு 1981 ஆம் ஆண்டில் 67 சத வீதமாக உயர்வடைந்த பாரடீசலின் நுகர்ச்சி வீதம் தொடர்ந்தும் 1982 ஆம் ஆண்டில் 59 சதவீதத்தால் அதிகரித்தது. கடந்த ஆண்டுகளில் கைத்தொழில் செயலாக்கங்களின் விரிவுடன் நுகர்ச்

சியில் அதிகரிப்பு காணப்பட்ட உலையெண்ணெய்யின் நுகர்ச்சி மீளாவிற்குரிய ஆண்டில் சிறிதளவு வீழ்ச்சியை எடுத்துக்காட்டியது. இலங்கை சீமெந்து, உருக்குக் கூட்டுத்தாபனங்கள் என்பன உலை யெண்ணெய்யினை 1982 ஆம் ஆண்டில் குறைந்தளவில் பயன்படுத்தியமையே இதன் நுகர்வில் ஏற்பட்ட வீழ்ச்சிப்போக்கிற்கு காரணமாக இருந்தது. சீமெந்துக் கூட்டுத்தாபனம் 1982ஆம் ஆண்டில் அதன் III ஆம் கட்டத் தொழிற்பாட்டிற்கு நிலக்கரியினை பதிலீடாகப் பயன்படுத்தியது.

அட்டவணை 1.23

**வலுத்துறையின் அடிப்படைப் பண்புகள் 1981 - 1982**

| விடயம் | 1981 | % மாற்றம் 1980க்கு மேலாக | 1982 | % மாற்றம் 1981க்கு மேலாக |
|---|---|---|---|---|
| 1. **பெற்றோலிய உற்பத்திகள்:** | | | | |
| 1.1. ஏற்றுமதிகள் (ரூ. ப. இல.) ... | 3,374.6 | 8.5 | 3,280.0 | —2.8 |
| 1.2. இறக்குமதிகள் (ரூ. ப. இல.) ... | 9,967.0 | 22.2 | 12,152.4 | 21.9 |
| 1.3. மசகெண்ணெயின் சராசரி விலை (ரூ. பீப்பா ஒன்றுக்கு) ... | 690 | 30.2 | 715 | 3.6 |
| 1.4. ஆண்டின் இறுதியில் உள்நாட்டு விலை (ரூ. லிற்றர் ஒன்றிற்கு) ... | | | | |
| அ. சிறப்புப் பெற்றோல் ... | 10.00 | 13.6 | 10.00 | — |
| ஆ. மண்ணெண்ணெய் ... | 3.89 | 16.5 | 3.89 | — |
| இ. தன்னியக்க டீசல் ... | 5.94 | 28.6 | 5.94 | — |
| ஈ. பார டீசல் ... | 5.68 | 24.0 | 5.68 | — |
| உ. உலை எண்ணெய் ... | | | | |
| 500 செகண்டுகள் ... | 4.44 | — | 4.44 | — |
| 800 செகண்டுகள் ... | 4.40 | — | 4.40 | — |
| 1000 செகண்டுகள் ... | 4.29 | — | 4.29 | — |
| ஊ. நிலக்கீல் ... | 6.27 | 90.0 | 6.27 | — |
| 1.5. உள்நாட்டு நுகர்வு (மெற்றிக் தொன்கள்) | | | | |
| அ. சிறப்புப் பெற்றோல் ... | 109,017 | 1.2 | 114,196 | 4.7 |
| ஆ. மண்ணெண்ணெய் ... | 168,248 | —10.6 | 174,111 | 3.5 |
| இ. தன்னியக்க டீசல் ... | 421,107 | 5.9 | 444,428 | 5.5 |
| ஈ. பார டீசல் ... | 106,625 | 66.7 | 169,286 | 58.8 |
| உ. உலை எண்ணெய் ... | 244,295 | 26.1 | 242,928 | 0.5 |
| 2. **மின்வலு:** | | | | |
| 2.1. நிறுவப்பட்ட இயலளவு ... | 501 | 19.0 | 561 | 1.20 |
| அ. நீர்மின் ... | 371 | 12.1 | 371 | — |
| ஆ. வெப்பமின் ... | 130 | 44.4 | 190 | 46.1 |
| 2.2. உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் (பத்து இலட்சம் கி. வா. ம.) ... | 1,871.6 | 12.2 | 2,065.7 | 10.4 |
| அ. நீர்மின் ... | 1,571.3 | 6.2 | 1,608.1 | 2,3 |
| ஆ. வெப்பமின் ... | 300.3 | 59.1 | 457.6 | 52.4 |
| 2.3. மொத்த விற்பனைகள் (பத்து இலட்சம் கி. வா. ம.) ... | 1501.1 | 7.9 | 1,683.8 | 12.2 |
| அ. உள்நாடு ... | 216.3 | 13.4 | 258.3 | 19.4 |
| ஆ. கைத்தொழில் ... | 676.7 | 8.2 | 739.1 | 9.2 |
| இ. வர்த்தகம் ... | 219.4 | —1.7 | 262.5 | 19.6 |
| ஈ. உள்ளூராட்சி மன்றங்கள் ... | 379.7 | 13.2 | 415.0 | 9.3 |
| உ. தெரு விளக்கு ... | 9.0 | — 45.4 | 9.0 | — |

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மின் சபை

நடைமுறையாண்டில் மின்வலுவிற்காக மிகவும் விரைவாக வளர்ந்து வரும் கேள்வியினை நல்லசீரிய முறையில் நிறைவு செய்வதே இலங்கை மின்சபையின் முதன்மை நோக்கமாக அமைந்தது. 1982 ஆம் ஆண்டில் இலங்கை மின்சபை

யால் மொத்தமாக உருவாக்கப்பட்ட 20,660 இலட்சம் கிலோவாட் மணித்தியால அலகுகள் 10 சதவீத உயர்ச்சியைக் காட்டுகின்றன. எனினும் மின்வலுவிற்கான கேள்வி 12 சத வீதமாக வளர்சியடைந்து மின் வழங்கலில் ஏற்பட்ட அதிகரித்த வீதத்தை பின்னடையச் செய்தது. மீளாய்விற்குரிய நடைமுறையாண்டில் இலங்கை மின்சபையின் நிறுவப்பட்ட இயலளவு, ஒவ்வொன்றும் 20 மெகவாட்டு இயலளவைக் கொண்ட மூன்று வளி விசையாழிகள் செயற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து 12 சத வீதத்தால் அதிகரித்தது. இது எதுவித மின்வெட்டுக்களையும் நாடாமல் உயர்ந்த செலவிலும் ஆண்டு முழுவதும் இலங்கை மின் சபையால் மின்னை வழங்குவதற்கு ஏதுவாக அமைந்தது. எனினும் மேலதிகமான மின்வலு கேள்வியினை வெப்பமின்னை உருவாக்குவதன் மூலம் திருப்தி செய்வதெனின் இது கூடுதலான உற்பத்திச் செலவிற்கு வழிகோலுவதுடன் எமது சென்மதி நிலுவையிலும் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தும்.

கூடுதலாக எண்ணெயினைப் பயன்படுத்தி மின்வலு உற்பத்தி செய்யப்பட்டதனால் ஏற்பட்ட உயர்ந்த உருவாக்கச் செலவு இலங்கை மின் சபையினை எண்ணெய்ச் சீராக்கக் கண்டணத்தை மீளமைவு செய்து மேலதிகச் செலவுகளை மீளப் பெறுவதற்கு வழிகோலியது. 1982 ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் புகுத்தப்பட்ட மீளமைவு செய்யப்பட்ட எண்ணெய்ச் சீராக்கக் கட்டணம் இத்தகைய மேலதிகக் கட்டணத்திற்கான விலக்கு எண்ணிக்கை அளவை 200 அலகுகளிலிருந்து 150 ஆகக் குறைத்தது. இவ்வாறு 150 அலகிற்கு மேல் நுகரும் அலகுகட்காக புகுந்தப்பட்ட மேலதிகக் கட்டணம் 1982 இன் இரண்டாம் அரைப் பகுதியில் 110 சத வீதமாக நிலையான வீதத்தில் வைக்கப்பட்டது. மின்வலு கட்டணத்தில் மேல் நோக்கிய உயர்ச்சி மேற்கொண்ட போதிலும் முன்னைய ஆண்டின் 8 சத வீத வளர்ச்சியுடன் ஒப்புநோக்குமிடத்து 1982 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கை மின் சபையின் மொத்த விற்பனைகள் 12 சத வீதத்தால் உயர்வடைந்துள்ளது. வீட்டுத் துறையின் மின்வலு நுகர்ச்சி 23 சத வீதமாக ஆகக்கூடிய வீதத்தைப் பதிவு செய்துள்ளவேளையில் 1981 இல் 2 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்த வர்த்தகத்துறையின் வளர்ச்சி 20 சத வீதம் கொண்டதொரு அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. கைத்தொழில் துறையும் உள்ளூராட்சி மன்றங்களும் முன்னைய ஆண்டைப்போன்று ஏறக்குறைய ஒரே அளவில் மின் நுகர்ச்சி வீதத்தை அதிகரித்துள்ளன.

மீளாய்விற்குள்பட்ட ஆண்டில் மின் நுகர்ச்சியின் மாதிரியமைப்பு வேறுபட்ட துறைகளின் தொடர்பான வீதங்களில் சில மாற்றங்களைக் காட்டுகின்றன. வீட்டுத்துறையும் வர்த்தக துறையும் முன்னைய ஆண்டின் ஒவ்வொன்றினதும் 14 சத வீதப் பங்குடன் ஒப்புநோக்குமிடத்து 1982 இல் அவற்றின் தொடர்பான பங்குகளை முறையே 15 வீதத்திலிருந்து 16 வீதமாக அதிகரித்துள்ளன. எனினும் கைத்தொழில்துறை முன்னைய ஆண்டைப் போன்று 1982 இன் காலப்பகுதியிலும் தொடர்ந்தும் ஆகக்கூடிய சதவீதப் பங்கு மின்வலுவை கொள்வனவு செய்துள்ளது.

**போக்குவரத்து**

எழுபதுகளின் பிற்பகுதியிலிருந்தும் காணப்பட்ட பொருளாதார சமூக நடவடிக்கைகளினது விரிவாக்கத்தின் விளைவாகப் பயணிகள், பொருட்கள் போக்குவரத்து இரண்டிற்குமான கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பு 1982 ஆம் ஆண்டிலும் தொடர்ந்திருந்தது.

1982 இல் அரசதுறைப் போக்குவரத்து முகவராண்மையில் ஏற்பட்ட நிதி இழப்புக்கள் முன்னைய ஆண்டினைவிட கணிசமானளவிற்கு அதிகரித்தன. எனினும் மத்திய போக்குவரத்துச் சபையின் ஒன்பது பிரதேச போக்குவரத்துச் சபைகளும் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் வழங்கப்பட்டநிதி உதவிகளுடன் மீளாய்விற்குரிய ஆண்டில் தமது பணிகளை விரிவாக்கக்கூடியனவாக இருந்தன.

நடைமுறையாண்டில் தனியார் போக்குவரத்துத்துறைக்கு மொத்தக் கழிவு வசதிகள் மீண்டும் ஓரளவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டமை, போக்குவரத்து வசதிகளை வழங்குவதில் தனியார்துறை பங்குகொள்ளல் விரிவடைவதனை ஊக்குவித்தது. இது அதிகரித்த கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக அரசதுறைமீது சுமத்தப்பட்ட பாரத்தைக் குறைத்தது. பயணிகள், பொருட்கள் போக்குவரத்துப் பணிகள் இரண்டிலும் தனியார்துறை பங்குகொள்வதிலிருந்தான அதிகரித்த போட்டி திருந்திய திறமையான பணிகளை வழங்குவதனை நோக்கி மிகச் சாதகமான அணுகுமுறைகளை மேற்கொள்ள அரசதுறையைக் கட்டாயப்படுத்தியது. அவ்வாறிருந்தும் அரசதுறை முகவராண்மைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1982இல் சார்புரீதியில் தமது தொழிற்பாடுகளில் சிறிதளவு வீழ்ச்சியை எடுத்துக்காட்டின.

பிரதேச போக்குவரத்துச் சபைகள் திறமையை அதிகரிப்பதற்கும், பணிகளை விரிவாக்குவதற்குமான அவற்றின் முயற்சியாக தொழிற்பாட்டிலுள்ள அவற்றின் பேருந்துத் தொகுதிகளை 1981 இல் 7,192 இலிருந்து 1982 இல் 7,427 இற்கு அதிகரித்தன. பேருந்துத் தொகுதியிலிருந்தும் புறக்கீடு செய்யப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை 1982 இல் 313 ஆக அமைந்த வேளையில் பேருந்துத்தொகுதியில் கூட்டப்பட்ட புதிய பேருந்துகளின் எண்ணிக்கை 1981 இல் 17இலிருந்து 1982 இல் 533இற்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. பேருந்துத்தொகுதிகளினதும் பணிகளினதும் விரிவாக்கம் மேலதிக இரண்டு புதிய தொழிற்கூடங்களினால் மேலும் உதவியளிக்கப்பட்டது,

முன்னைய ஆண்டினைப் போன்றே ஒன்பது பிரதேச போக்குவரத்துச் சபைகளினதும் தொழிற்பட்ட கிலோமீற்றர்களும், பயணிகள் கிலோமீற்றர்களும் நடைமுறையாண்டிலும் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. எனினும் 1982 இல் தொழிற்பட்ட 4,820 இலட்சம் கிலோமீற்றர்கள் முன்னைய ஆண்டின் 4 சத வீத வீழ்ச்சிக்கு எதிராக 2 சத வீதங்கொண்ட வீழ்ச்சியை எடுத்துக்காட்டுவது இங்கு குறிப்பிடத்தக்கது. பிரதேச போக்குவரத்துச் சபைகளினது பயணிகள் கிலோமீற்றர்களின் மொத்தம் 1982 இல் 135,020 இலட்சங்களாகக் காணப்பட்டது.

1981 இல் இது தொடர்பான பயணிகள் கிலோமீற்றர்கள் 137,910 இலட்சங்களாக காணப்பட்டது. இப்புள்ளி விபரங்களின் அடிப்படையில்பயணிகள் கிலோ மீட்டர்களின் வீழ்ச்சி வீதம் 1981 இல் 30 சத வீதத்திலிருந்து 1982 இல் 2 சத வீதத்திற்கு குறைவடைந்தது. இது நடைமுறையாண்டில் ஒன்பது பிரதேச சபைகளினதும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகக் கருதப்படவேண்டும்.

பிரதேச போக்குவரத்துச் சபைகளினதும் நிதி இழப்புக்கள் 1982இல் ரூ.6290 இலட்சங்களாக இருந்ததுடன் இது 1981 ஆம் ஆண்டினைவிட 46 சதவீதங்கொண்ட அதிகரிப்பையும் பிரதிபலித்தது. உயர்ந்த இழப்புக்களுக்குப் பொறுப்பாக இருந்த முக்கிய காரணிகளாக உந்து உதிரிப்பாகங்களின் அதிகரித்த செலவு, உயர்ந்த தொழிற்பாட்டு போக்குவரத்துச் செலவு ஆகியன விளங்கின. எனினும் 1981 இன் மொத்தச் செலவில் 45 சதவீதத்திற்கு உயர்ந்த எரிபொருள் செலவின் கூறு நடைமுறையாண்டில் 1 சதவீதத்தால் சிறிதளவாக வீழ்ச்சியடைந்தது.

இலங்கை அரச புகைவண்டிப் பகுதியின் பொதுவான செயலாற்றம் 1982 இல் ஏமாற்றமளிப்பதாக இருந்தது. 100 இலட்சங்களாகப் பதிவு செய்யப்பட்ட தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சிறிதளவு அதிகரிப்பிற்கு எதிராக சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டின. எனினும் பயணிகள் கிலோமீற்றர்கள். கடந்த இரண்டு ஆண்டுகளிலும் பயணிகள் பேருந்துகள் மூலமான பயணத்திற்கு முன்னுரிமை வழங்கியதன் காரணமாக பெருமளவு வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு மாறாக மீளாய்விற்குரிய ஆண்டில் 5 சத வீதமளவால் முன்னேற்றமடைந்தது.

1980 இல் 2,060 இலட்சம் தொன் கிலோமீற்றர்களிலிருந்து 1981இல் 2,190 இலட்சம் தொன்கள் கிலோமீற்றர்களுக்கு அதிகரித்த சரக்குத் தொன் கிலோ மீற்றர்கள் மீளாய்விற்குரிய ஆண்டில் 2,170 இலட்சம், தொன் கிலோ மீற்றர்கள் கொண்ட மொத்தத்திற்கு 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இலங்கை அரச புகையிரதவண்டியின் தொழிற்பாட்டு இழப்புகள் கடந்த காலத்தில் படிப்படியாக அதிகரித்தன. 1982 இல் இலங்கை அரச புகைவண்டிப்பகுதியின் தொழிற்பாட்டு இழப்பு முன்னெப்பொழுதும் இல்லாதவாறு மிக உயர்வாக ரூ. 3,240 இலட்சங்களாக விளங்கி 1981 இல் பதிவு செய்யப்பட்ட இழப்புக்களுக்கு மேலாக 37 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. இவ்வாண்டின் உயர்ந்த இழப்பிற்கு உதவிய முக்கிய காரணியாக அதிகரிக்கப்பட்ட சம்பளச்செலவு கருதப்பட்டது. இது 1981 இல் ரூ. 1,950 இலட்சங்களிலிருந்து 1982 இல் ரூ. 2,530 இலட்சங்களுக்கு அல்லது 30 சதவீதத்தால் அதிகரித்தது.

தனியார்துறை போக்குவரத்துத் தொழிற்பாடுகள் 1982இல் மேலும் விரிவாக்கத்தைக் காட்டின. 1981இல் 12 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த தனியார் சொகுசு பயணி வண்டிகளின் மொத்தம் 1982இல் 2,533ஆக விளங்கி முன்னைய ஆண்டின் தொடர்பான எண்தொகையிலும் பார்க்க 9 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. தனியார் பயணிகள் போக்குவரத்துத்துறைக்கான மொத்தக்

கழிவு வசதி 1982இன் பிற்பகுதியில் மீண்டும் வழங்கப்பட்டமை இத்துறையிலான முதலீட்டை ஊக்குவித்தது. தனியார்துறையினுல் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் வான்கள், பேருந்துகளின் மொத்த எண்ணிக்கை 179,900இருக்கை இயலளவுடன் 7000ஆக மதிப்பிடப்பட்டது.

1980இல் மிக உச்சமட்டத்திற்கு உயர்ந்த கேள்வி படிப்படியாகக் குறைவடைந்தமை சரக்கு வண்டிகளின் புதிய பதிவுகள் கடந்த ஆண்டின் 16சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1982இல் 20சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தமையில் பிரதிபலித்தது. பொருட்கள் போக்குவரத்துத்துறையின் கடுமையான போட்டி ஊர்திகளின் உயர்ந்து செல்லும் செலவுடன் இணைந்து இம்மாற்றத்திற்கு பெருமளவு உதவியது. முன்னைய ஆண்டினைப் போன்றே உந்து ஈருருளிகளைப் பொறுத்தவரை புதிய பதிவுகளில் மிகப் பெரும் குறைவு பதிவு செய்யப்பட்டது.

அட்டவணை 1.24

**போக்குவரத்துத் துறையின் அடிப்படைப் பண்புகள் 1981—1982**

| விடயம் | 1981 | 1980 இற்கு மேலாக சதவீத மாற்றம் | 1982 | 1981இற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| 1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் (எண்ணிக்கை) | | | | |
| 1.1 இ.ம.போ. சபையின் பேருந்துகள் . | 24 | – 96.9 | 555 | 2,212.5 |
| 1.2 தனியார் சொகுசு வண்டிகள் .. | 2,330 | – 12.3 | 2,533 | 8.7 |
| 1.3 தனியார் வாடகை வண்டிகள் .. | 5,760 | – 14.4 | 5,667 | – 1.6 |
| 1.4 உந்து ஈருருளிகள் ... | 17,160 | – 50.6 | 10,847 | – 36.8 |
| 1.5 சரக்குகள் கொண்டு செல்வதற்கான சரக்கு வண்டிகளும் ஏனைய ஊர்திகளும் .. | 8,036 | – 16.4 | 6,459 | – 19.6 |
| 2. இ. ம. போ. சபையின் தொழிற்பாடுகள் | | | | |
| 2.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் (ப.இலட்சம்) .. | 493.5 | – 4.4 | 481.8 | – 2.4 |
| 2.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் (ப.இலட்சம்) ... | 13,791.4 | – 30.3 | 13,501.6 | – 2.1 |
| 2.3 மொத்த வருவாய் (ரூ.ப.இ.) .. | 1,779.4 | 14.6 | 1,772.7 | – 0.4 |
| 2.4 மொத்தச் செலவு (ரூ. ப. இ.) ... | 2,208.5 | 20.3 | 2,401.3 | 8.7 |
| 2.5 இலாபம்(+)அல்லது இழப்பு(—) (ரூ.ப.இ.) ... | – 429.1 | 51.2 | –628.6 | 46.5 |
| 3. இ. அ. புகைவண்டியின் தொழிற்பாடுகள் | | | | |
| 3.1 தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் (ப. இலட்சம்) .. | 10.5 | 0.8 | 10.5 | – 0.3 |
| 3.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் (ப இலட்சம்).. | 2,985.1 | – 21.4 | 3,121.3 | 4.6 |
| 3.3 சரக்கு தொன் கிலோ மீற்றர்கள் (ப. இ.) .. | 218.8 | 6.1 | 216.8 | – 0.9 |
| 3.4 மொத்த வருவாய் (ரூ. ப. இ.) .. | 408.9 | 13.9 | 427.4 | 4.5 |
| 3.5 மொத்தச் செலவு (ரூ. ப. இலட்சம்) ... | 644.8 | 20.5 | 751.6 | 16.6 |
| 3.6 தொழிற்பட்ட இழப்பு (ரூ. ப. இலட்சம்) ... | – 235.9 | 34.0 | –324.3 | 37.5 |

மூலங்கள்: உந்து ஊர்திகள் திணைக்களம்
இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை
இலங்கை அரச புகைவண்டி

**வீடமைத்தலும், நகர் அபிவிருத்தியும்**

1982 ஆம் ஆண்டில் வீடமைத்தல் நகர் அபிவிருத்தித்துறையின் செயலாற்றத்தின் வேகம் கணிசமானளவு குறைந்து காணப்பட்டது. இச்செயலாற்றத்தின் மந்தநிலைக்கு முன்னைய ஆண்டு தொடக்கம் மூலவளத்தில் நிலவிய சிக்கல்களும், கட்டடவாக்கச்செலவில் ஏற்பட்ட உயர்ந்த அதிகரிப்புக்களுமே முக்கிய காரணங்களாக அமைந்தன. பொதுமக்கட்கான வீடுகளை அமைப்பதற்கான அரசின் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு தேசிய வீடமைப்பு

அபிவிருத்தி மேலாண்மைச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடும் நிதிப்பிரச்சினைகளின் விளைவாக வரவுசெலவுத்திட்டத்தில் ஏற்பட்ட சிக்கல்கள், எதிர்பார்த்ததிலும் குறைவாக செலவுத்தொகைகள் மீளப் பெறப்பட்டமையும் அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் குறைக்கப்பட்டதற்கான காரணங்களாகும். கட்டடவாக்கச் செலவுகளில் (மூலப்பொருட்களும், தொழிலாளர்களும்) ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக செலவு விஞ்சியமையாலும், பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் முகாமைத்துவம் ஆகியவற்றில் காணப்பட்ட தட்டுப்பாடு என்பனவும் அபிவிருத்திக்கு இடர்பாடாக இருந்தன. எனவே 1981 ஆம் ஆண்டைப்போன்று 1982 ஆம் ஆண்டிலும் குறைந்த வருவாய் பெறும் மக்கள் தொகுதிகளுக்கு உதவி வழங்கப்பட்ட சுயஉதவிமுறை நிகழ்ச்சித்திட்டம் போன்ற குறைந்த செலவினைக்கொண்ட வீடமைப்புத்திட்டங்களை பின்பற்றும் முறை ஊக்குவிக்கப்பட்டது. இத்தகைய செயற்றிட்டம் உள்ளூர் மூலப்பொருட்களில் தங்கியிருப்பதோடன்றி தொழில் நுட்பம், ஒருவரின் சொந்த ஊழியம் என்பன மொத்த கட்டடவாக்கச்செலவுகள் மீதான தாக்கத்தைக் குறைப்பதாக அமைகிறது. எனவே வரையறுக்கப்பட்ட நிலையில் உயர்ந்தசெலவில் அமைந்தசெயற்றிட்டங்களைவிடுத்து கிடைக்கும் மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்கட்கிடையில் செயற்படுவதற்கேற்றவாறு குறைந்த செலவைக்கொண்ட செயற்றிட்டங்களுக்கு மாறியமையைக் காணலாம். இது 1982ஆம் ஆண்டில் நேரடியாகக் கட்டப்படும் வீடுகள் அல்லது அரச ஊழியர்கட்கான குடிமனைகள் அமைப்பதற்கான திட்டம் மேற்கொள்ளப்படாமையிலிருந்து தெளிவாகிறது.

1978 - 1982 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் அரச துறை வீடமைப்புத்திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவுத்தொகையான ரூ. 43,350இலட்சத்தில் 1982ஆம் ஆண்டில் ரூ. 9,220இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1982 இல் நேரடியாகக் கட்டப்படும் வீடுகள் எதுவும் புதிதாகத் தொடங்கப்படவில்லை. எனினும் மீளாய்விற்கான ஆண்டில் 1,810கூறுகள் மீதான வேலைகள் முழுமையாக்கப்பட்டவேளையில் 2,713 கூறுகள்மீதான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. அடைந்த முன்னேற்ற நியதிகளில் கிராமிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் (உதவி வழங்கப்பட்ட சுயஉதவிமுறை வீடுகள், மாதிரிக்கிராமங்கள், மீனவர்களுக்கான வீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியது) மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் உச்ச நிலையை அடைந்தது. 1982 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 4.492 கூறுகள் மீதான வேலை முற்றுப் பெற்றவிடத்து, 13,844 கூறுகள் மீதான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சூழ்நிலை மாறியமையின் காரணமாக வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் மூன்றுவது பகுதியும் தேர்தல் தொகுதி வாரியான வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டமும் திருத்தியமைக்கப்பட்டன. நேரடியாகக் கட்டப்படும் முறைகள் உதவி வழங்கப்பட்ட சுயஉதவிமுறை வீடுகளால் மாற்றியமைக்கப்பட்டன. 1982 ஆம் ஆண்டில் 1,140 கூறுகள் முழுமையாக்கப்பட்டதுடன் மேலும் 3,340 கூறுகள் அமைக்கப்படுகின்றன. 1982இல் அரச ஊழியர்களுக்கான குடிமனைகளின் கட்டடவாக்கம் புதிதாக மேற்கொள்ளப்படாதவேளையில் ஆண்டின் இறுதியில் 156 கூறுகள் கட்டிமுடிக்கப்பட்டன. 1982ஆம் ஆண்டில் வீடமைப்புக்கடன் நிகழ்ச்சித்திட்டம் செயற்படவில்லை.

கடந்த காலங்களில் நிலவிய உயர்மட்ட செயல்பாடுகளுடன் ஒப்புநோக்கு மிடத்து நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையால் மேற்கொள்ளப்பட்ட கட்டட வாக்க செயல்பாட்டு வீதம் 1982இல் குறைந்து காணப்பட்டது. நிதி சிக்கல்களின் காரணமாக இவ்வாண்டுக்காலத்தில் புதிய கட்டிடவாக்க முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபையால் 1981 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூ. 9,120 இலட்சம் பெறுமதியான வேலையுடன் ஒப்புநோக்குமிடத்து அது 1982ஆம் ஆண்டில் ரூ. 8,330இலட்சமாக விளங்கியது. நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபையால் மேற்கொள்ளப்பட்ட பெரும் நிகழ்ச்சித் திட்டமாக பத்தரமுல்லை, பெல்லவத்தை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட நாடாளுமன்றக் கட்டட தொகுதியையும், இரு நிர்வாகக்கட்டிட தொகுதிகளையும் உள்ளடக்கிய சிறீசயவர்த்தனபுர தலைநகர் அபிவிருத்தி செயல்திட்டம் விளங்கியது. நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியின் வேலை முடிக்கப்பட்டு கடந்த ஆண்டின் தொடக்கத்தில் அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின் பொருட்டு நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபையினுல் செலவிடப்பட்ட மொத்தத்தொகையான ரூ. 9,680 இலட்சத்தில் 1982ஆம் ஆண்டு செலவிடப்பட்டதொகை ரூ. 2,920இலட்ச மாகும். மூலதன அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கு நிதியீட்டுவதற்கு நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையினுல் வழங்கப்பட்ட நிதியுடன் பல்வேறு அமைச்சுக்களும் அவற்றின் வரவு செலவுத்திட்டங்களின்மூலமாக நிதி வழங்கியதன் மூலம் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. 1982 ஆம் ஆண்டில் பெல்லவத்தை, பத்தரமுல்லை ஆகிய இடங்களில் கட்டட அமைப்பின்கீழ் இருந்த நிர்வாக தொகுதி கட்டடங்களுக்கான நிதி நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபைத் தொகுதிக்கடன் முறிகளின் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டன. நடைமுறையாண்டுக் காலத்தில் ஒவ்வொரு கட்டடத்தொகுதியும்முறையே ரூ. 940இலட்சத்தினையும், ரூ.1,010இலட் சத்தினையும் ஈர்த்துக்கொண்டன. 1982ஆம் ஆண்டில் முடிவுற்ற புனித யோன் மீன்சந்தை, இயங்கும் பகல் இரவுச்சந்தை ஆகியனவும் நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபைத் தொகுதி கடன் முறிகளின் மூலமே நிதியீட்டம் செய்யப்பட்டன. முன்னையதன் மீதான மொத்தச்செலவு ரூ. 3,050 இலட்சத்தையடைந்த வேளையில் 1982ஆம்ஆண்டில் இத்தொகையில் ரூ.1,000இலட்சம்செலவிடப்பட்டது. மத்திய பகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் மீளாய்விற்கான ஆண்டில் செயல்முறையில் இருந்த மற்றெரு செயற்றிட்டம் எச்சலோன் சதுக்கச் செயற் றிட்டமாகும். 1982இல் ரூ. 910இலட்சம் செலவிடப்பட்ட லிபர்ட்டி கட்டுமனைத் தொகுதி தனியார்துறை அபிவிருத்தியாளருக்கு கையளிக்கப்பட்டது.

சில கைத்தொழில்களையும் களஞ்சியங்களையும் மீள வேறு இடங்களில் அமைப்பதன் பொருட்டு நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை உறுகொடவத்தை உணவுக் களஞ்சியத்தொகுதி கட்டடம், பேலியகொடை ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித்திட்டம், இரத்மலானை கைத்தொழில் வேலைத்தலத்திட்டம் போன்ற பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டது. உறுகொடவத்தை உணவுக் களஞ்சிய தொகுதிக் கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டதற்கான மொத்தச்செலவான ரூ.1,260இலட்சத்தில், 1982ஆம் ஆண்டில் ரூ. 270இலட்சம் செலவுசெய்யப்பட்டது.

மொத்தச்செலவு வாக்களிக்கப்பட்ட செலவின் மூலமாகப்பெறப்பட்டது. ஏனைய இரண்டு செயற்றிட்டங்களின் வேலைகள் ஆண்டு இறுதியில் ஏறக்குறைய முடிவடையும் நிலையில் இருந்தன. மாவட்டத்தலைநகர் திட்டமிடல் செயற்றிட்டத்தின்கீழ் பல பட்டின நிலையங்களின் திட்டமிடலும் கட்டடவாக்கமும் செயற்படுத்தப்பட்டன. நகர்ப்புறங்களில் சந்தைகள், வாடிவீடுகள், படமாளிகைகள் போன்ற வசதிகளை ஏற்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபை தனியார்துறை அபிவிருத்தியாளருக்காக பல கட்டட பகுதிகளின் அபிவிருத்தியையும் பொறுப்பேற்றது.

அரசின் நேரடியான கொடை வழங்கல்கள் வெளிநாட்டு உதவி ஆகியவற்றின் மூலமும் நிதிகளைப் பெறுகின்றதும், நீண்டகால வீடமைப்பு சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு மிகவும் வேண்டியதொரு திட்டமாகக் கருதப்படுகின்றதுமான சேரி, குடிசை வீடுகளைத்தரம் உயர்த்தும் திட்டம் 1982ஆம் ஆண்டில் நடைமுறையிலிருந்தது. இக்காலப்பகுதியில் கொழும்பு, காலி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தரம் உயர்த்துவதற்கான பல நிகழ்ச்சித்திட்டங்களின் மீதான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன. இத்திட்டங்களின் மீதான மொத்தச் செலவு 1982ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 270 இலட்சத்தை அடைந்தவேளையில் மீளாய்விற்குரிய ஆண்டில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 60 இலட்சமாக விளங்கியது.

நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபையின் நிதியீட்டங்களுக்கான முதன்மை மூலங்களாக அதன் மூலதனம், அரசின் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகைகள், நகர அபிவிருத்தி மேலாண்மைச்சபைத் தொகுதிக்கடன் முறிகள், மேலாண்மைச்சபை தானுகவே உருவாக்கும் வருவாய் என்பன விளங்குகின்றன, எனினும் இச்சபை வர்த்தக அடிப்படையில் இலாபகரமாகச் செயற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த இரு ஆண்டுகளாக நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை, வரவு செலவுத்திட்டத்தில் ஏற்பட்ட சிக்கல்களின் காரணமாக அதன் செயற்றிட்டங்களுக்கு நிதியீட்டம் செய்வதற்கானமுதன்மைக்கருவியாக தொகுதிக் கடன் முறிகளில் தங்கியிருக்கவேண்டியிருந்தது. 1981 ஆம் ஆண்டின் ரூ. 4,320 இலட்சங்கொண்ட தொகுதிக்கடன் முறிகளுடன் ஒப்புநோக்குமிடத்து 1982 இல் இக்கடன் தொகை ரூ. 3,670 இலட்சத்திற்கு வரையறுக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டில் திறைசேரியால் ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 2,670 இலட்சத்துடன் ஒப்புநோக்குமிடத்து 1982 இல் திறைசேரியால் ஒதுக்கப்பட்ட தொகையின் மொத்தம் ரூ. 2,950இலட்சமாகும். வாடகைகள், குத்தகைகள் போன்றவற்றின் மூலம் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட நிதிகள் 1981ஆம் ஆண்டில் ரூ. 900இலட்சமாக இருந்தவேளையில் 1982ஆம் ஆண்டில் ரூ. 470 இலட்சமாகவும் விளங்கியது.

மீளாய்விற்குரிய ஆண்டில் தனியார் துறையால் தொடங்கப்பட்ட வீடமைப்புக் கட்டடவாக்கச் செயற்பாடுகள் மிதமான அளவில் உயர்வடைந்திருந்தது. உயர்ந்த காணி விலைகளும் அதிகரித்துச்செல்லும் கட்டடவாக்கச் செலவுகளும் அரசினுல் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்களின் நன்மைகளை பெருமளவுக்கு எதிரீடு செய்தன.

## அட்டவணை 1.25
## அரசதுறையின் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் 1981—1982

| நிகழ்ச்சித் திட்டம் | இலக்கக் கூறுகளின் எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு (ரூ.ப.இ.) | கட்டி முடிக்கப்பட்ட கூறுகளின் எண்ணிக்கை | | அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கூறுகளின் எண்ணிக்கை | | மொத்தச் செலவு (ரூ. ப. இ.) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1981 | 1982 | 1981 | 1982 | 1981 | 1982 |
| 1. நேரடி கட்டடவாக்கம் ... | 36,000 | 4,608.8 | 2,364 | 1,810 | 4,482 | 2,713 | 766.8 | 706.5 |
| 2. கிராமிய வீடமைப்பு ... | 50,000 | 779.8 | 5,942 | 4,492 | 15,454 | 13,844 | 116.9 | 108.5 |
| 2.1. உதவியளிக்கப்பட்ட சுய உதவிமுறை வீடமைப்பு ... | வி. கி. | (100.0) | 1,142 | 2,055 | 10,862 | 8,833 | வி. கி. | வி. கி. |
| 2.2. மாதிரிக் கிராமங்கள் ... | வி. கி. | வி. கி. | 4,071 | 1,894 | 3,702 | 4,826 | வி. கி. | வி. சி. |
| 2.3. மீனவருக்கான வீடுகள் ... | வி. கி. | வி. கி. | 729 | 543 | 890 | 185 | வி. கி. | வி. கி. |
| 3. தேர்தல் தொகுதிவாரியான வீடமைப்பு ... | 26,040 | 760.0 | 491 | 1,140 | 4,008 | 3,340 | 267.6 | 80.8 |
| 4. அரச அலுவலர்களுக்கான விடுதிகள் ... | 695 | 88.0 | 204 | 156 | 288 | 24 | 36.6 | 20.3 |
| 5. சேரிகள், குடிசைகள் தரம் உயர்த்தல் . | 5,839 | 55.0 | வி. கி. | வி. கி. | வி. கி. | வி. கி. | 20.3 | 6.0 |
| 6. தேசிய வீடமைப்பு நிதியக்கடன் ... | 14,000 | — | — | — | — | — | | — |
| மொத்தம் ... | 132,574 | 6,291.6 | 9,001 | 7,598 | 24,232 | 19,921 | 1,208.2 | 922.1 |

மூலங்கள்: தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை,
நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை
உள்ளூராட்சி வீடமைப்பு கட்டடவாக்க அமைச்சு.

அட்டவணை 1.26

**கொழும்பு மாநகரசபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கட்டட வரைபடங்கள்**
**1979 1982**

| நிகழ்ச்சித் திட்டம் | 1981 | 1980ற்கு மேலாக சதவீத மாற்றம் | 1982 | 1981ற்கு மேலாக சதவீத மாற்றம் |
|---|---|---|---|---|
| 1. புதிய வதிவிடக் கட்டடங்கள் (மொத்தம்) ... | 530 | — 5.9 | 589 | 11.1 |
| 1. 1. வீடுகள் ... | 288 | 6.3 | 364 | 26.4 |
| 1. 2. தொடர் மாடிகள் ... | 242 | —17.1 | 225 | — 7.0 |
| 2. வர்த்தகக் கட்டடங்கள் ... | 58 | —13.4 | 45 | —22.4 |
| 3. புதிய கைத்தொழில் கட்டடங்கள் ... | 4 | —88.9 | 10 | 150.0 |
| 4. புதிய பள்ளிக்கூடக்கட்டடங்கள் ... | 5 | — | 3 | — 40 |
| 5. இணைப்புக்களும் திருத்தங்களும் ... | 528 | 15.8 | 538 | 1.9 |
| 6. ஏனைய கட்டடங்கள் ... | 15 | 114.3 | 60 | 300.0 |
| மொத்தம் | 1,140 | 0.5 | 1,245 | 9.2 |

* அரச, கூடடுத்தாபன கட்டட வரைபடங்கள் நீங்கலாக

மூலம்: கொழும்பு மாநகர சபை.

நாடு முழுவதற்குமான தனியார்துறையின் வீடமைப்புக் கட்டடவாக்கம் பற்றிய தரவுகள் இல்லாமையின் காரணமாக இத்துறையின் அபிவிருத்தி பற்றிக் கணிப்பதற்கு கொழும்பு மாநகரசபையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டட திட்டங்க்ளின் எண்ணிக்கை, வர்த்தக வங்கிகளால் வீடமைப்பு நோக்கங்களுக்காக தனியார்துறைக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் ஆகியவை இரு குறிகாட்டிகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. 1981 ஆம் ஆண்டின் 1,140 ஒப்புதல்களுடன் ஒப்பிடுகையில் 1982ஆம் ஆண்டில் கொழும்பு மாநகரசபையால் ஒப்புதல் அளிக்கப்பட்ட புதிய கட்டிடங்களின் எண்ணிக்கை 1,245 ஆக விளங்கி மொத்த நியதிகளில் 9சதவீத அதிகரிப்பை எடுத்துக்காட்டுகிறது. 1981இல் வீடுகள், தொடர்மாடிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய வதிவிடக்கட்டிடங்களுக்கான புதிய ஒப்புதல்கள் 1981 இன் 530 உடன் ஒப்பிடுகையில் 1982இல் 589 ஆக விளங்கி இத்துறையில் 11 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. இத்தொகுதியில் வீடமைப்பதற்கான ஒப்புதல்கள் 26 சதவீதத்தால் உயர்வடைந்துள்ள வேளையில் தொடர்மாடிகளுக்கான ஒப்புதல்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தன. வர்த்தக, கைத்தொழில், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஏனைய முதன்மை தொகுதியின் கீழான வதிவற்ற புதிய கட்டிடங்களின்மீதான ஒப்புதல்கள் முன்னைய ஆண்டிலும் பார்க்க 43 சதவீதத்தால் அதிகரித்தன. கைத்தொழில் கட்டடத் தொகுதிகளுக்கான ஒப்புதல்கள் 150 சதவீதத்தால் உயர்வடைந்த வேளையில் வர்த்தகக் கட்டிடங்களுக்கான ஒப்புதல்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளன. வழங்கப்பட்ட 1,245 கட்டட ஒப்புதல்களில் 43சதவீதமானவை மேலதிக இணைப்பு கட்டும் மாற்றல்களுக்குமாக இருந்ததுடன் காணிச்செலவுகளை குறைக்கும் நோக்கத்தையும் தற்போதுள்ள வசதிகளை விரிவாக்கி புத்தாக்கம் செய்வதற்கான நோக்கத்தையும் பிரதிபலிக்கின்றது. கொழும்பில் கட்டடம் அமைக்கக்கூடிய காணிகளின் தட்டுப்பாடு, உயர்ந்த விலைகள் ஆகியவற்றின் காரணமாக குடியிருப்பதற்கான புதிய குடியிருப்பு, வர்த்தக, கைத்தொழில், கட்டடங்கள் போன்றவற்றின் கட்டடவாக்க தொழிற்பாடுகள் அனைத்தினதும் அமைவிடம் புறநகர்ப்பகுதிகளை நோக்கி இடம்பெயர்ந்துள்ளது எனக் கருதப்படுகின்றது.

1982 இல் வீடமைப்பதற்காக வர்த்தக வங்கிகளினால் தனியார்துறைக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் 27சதவீதத்தால் அதிகரித்துள்ளன. 1981இல் வெளி நின்ற முற்பணங்களின் தொகை ரூ. 11,810 இலட்சமாக இருந்த வேளையில் 1982 இல் ரூ. 15,000 இலட்சமாக உயர்வடைந்தது. எனினும் வீடமைப்பு நோக்கங்களுக்காக தனியார்துறைக்கு வழங்கப்பட்ட முற்பணங்களில் ஓர் வீழ்ச்சிப்போக்கு காணப்பட்டது.

இலங்கையில் கட்டட அமைப்புக்கள், கடன், கொடுகடன் நிறுவனங்கள், போன்ற வீடமைப்பிற்கு நிதியீட்டம் செய்வதற்கான அனைத்தையும் உள்ளடக்கிய அமைப்பு ஒன்றிருக்கவில்லை. வீடமைப்பதற்கு நிதியீட்டம் செய்வதற்கு தனியார் துறைக்கடன் அளிக்கும் நிறுவனங்கள் துரிதமாக ஈடுபடவில்லை. வீடுஅமைப்பதற்கு நிதி வழங்குவதில் அதிகளவு ஈடுபட்டுள்ள ஒரேயொரு நிதி நிறுவனமாக தொடர்ந்தும் அரசு ஈட்டு முதலீட்டு வங்கி விளங்குகிறது.

**விரைவுபடுத்தப்பட்ட மகாவலி செயற்றிட்டம்**

விரைவுபடுத்தப்பட்ட மகாவலி செயற்றிட்டம் நாட்டின் முதன்மை அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் ஒன்றாகத் தொடர்ந்தும் இருந்ததுடன் 1982ஆம் ஆண்டில் இச்செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தலில் குறிப்பிடத்தக்க செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. 1982 இறுதி வரை இச்செயற்றிட்டத்தின் மீது ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 133,290 இலட்சங்களாக விளங்கியதுடன் இதில் ரூ. 55,260 இலட்சம் அல்லது 41 சதவீதம் 1982ஆம் ஆண்டில் செலவிடப்பட்டது.

விரைவுபடுத்தப்பட்ட மகாவலி செயற்றிட்டம் மூன்று முதன்மைக் கூறுகளையும், விக்டோரியா, கொத்மலை, மதுருஓயா, இரந்தெனிகல ஆகிய நான்கு முதன்மைச் செயற்றிட்டங்களையும் முறை 'சி' முறை 'எச்' இலுள்ள எஞ்சிய நிலங்கள், பழைய எலகர குடியேற்றத்திட்டத்தை உள்ளடக்கிய முறை 'ஜி' ஆகியவற்றை உள்ளடக்கிய நிலக்கீழ் நீரோட்டப் பிரதேசங்களின் அபிவிருத்தியுடன் தொடர்புள்ள திருப்பு வேலைகள், நீர்ப்பாசனம், பொறியியல் வேலைகளையும் கொண்டுள்ளது. இரந்தெனிகல செயற்றிட்டத்தின் மீதான தொடக்க வேலைகள் மீளாய்விற்குரிய ஆண்டில் தொடங்கப்பட்ட வேளையில் ஏனைய செயற்றிட்டங்களில் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்க செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 1982 இறுதி வரை விக்டோரியா செயற்றிட்டத்தில் ஏற்பட்ட மொத்தச்செலவு ரூ. 29,970 இலட்சங்களாக விளங்கியதுடன் இதில் 43 சதவீதம் 1982ஆம் ஆண்டில் ஏற்பட்டது. இம்முழுச் செயற்றிட்டமும் 1984ஆம் ஆண்டின் முடிவில் முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுவதுடன் அவ்வேளையில் மகாவலித்திட்டத்தின் முறை 'பி' முறை 'சி'யிலுள்ள 55,000 எக்டேயர்களைக் கொண்ட அபிவிருத்தியடையாத நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகளும் வழங்கப்பட வேண்டும்.

கொத்மலைச் செயற்றிட்டம் கொத்மலை ஓயாவிற்குக் (மகாவலி கங்கையின் கிளை நதி) குறுக்கான ஓர் அணையையும், ஒவ்வொன்றும் 66 மெகாவாட்டுக்கள் நிறுவப்பட்ட இயலளவைக்கொண்ட நிலக்கீழ் மின்வலு நிலையங்களின் இரண்டு

கூறுகளுக்கு வழிவகுக்கும் குடைவழிமுறையையும் கொண்டுள்ளன. அணைக்கட்டு வேலை நிகழ்ச்சித்திட்டக் கட்டத்தின்கீழ் முதன்மை அணையின் முதல்நிலை அகழ்வு 1982இல் முற்றுப்பெற்ற வேளையில் இரண்டாவது அகழ்வு ஆண்டின் இறுதியில் ஏறத்தாள முற்றுப்பெறும் நிலையில் இருந்தது. வலு நிலையத்தின் மீதான வேலைகள் நிகழ்ச்சித்திட்டப்படி செயற்பட்டு வருகின்றன. 1982 இறுதிவரை இச்செயற்றிட்டத்தின் மீது ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 35,110 இலட்சங்களாக இருந்ததுடன் இதில் 43 சதவீதம் 1982இல் செலவிடப்பட்டது.

மதுறுஓயா செயற்றிட்டத்தின் முதன்மை அணையின் கட்டுமானம் 1982 ஒற்றோபரில் முற்றுப்பெற்றது. 1982 இறுதிவரை இச்செயற்றிட்டத்தின்மீது ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 19,840 இலட்சங்களாக விளங்கியதுடன் இதில் ரூ. 9,460 இலட்சம் அல்லது 48 சதவீதம் இவ்வாண்டுக்காலத்தில் செலவிடப்பட்டதாகும்.

அட்டவணை 1.27

**விரைவு படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டம் செலவு மதிப்பீடுகள்**

ரூபா பத்து இலட்சம்

| செயற்றிட்டம் | 1982இற்கான வரவு செலவு திட்ட செலவினம் | | | 1982க்கான உண்மைச் செலவினம் (அ) | 1982 இறுதி வரையான ஒன்று சேர்ந்த செலவினம் (அ) |
|---|---|---|---|---|---|
| | ஒதுக்குகள் | துணை ஒதுக்குகள் | மொத்தம் | | |
| 1. விக்டோரியா நீர்த்தேக்கம் .. | 1,714 | — | 1,714 | 1,289 | 2,997 |
| 2. கொத்மலை நீர்த்தேக்கம் .. | 1,600 | — | 1,600 | 1,509 | 2,511 |
| 3. இரந்தெனிகலை நீர்த்தேக்கம் .. | 1,248 | — | 1,248 | 536 | 640 |
| 4. மாதுறு ஓயாவும் இணைப்புக்குடை வழியும் .. | 601 | — | 601 | 946 | 1,984 |
| 5. மினிப்பே அணைக்கட்டு மாற்று வடிகால் சால்வாய் செயற்கூறு .. | 325 | — | 325 | 321 | 729 |
| 6 நீர்ப்பாசனமுறை 'ப' .. | 509 | — | 509 | 344 | 537 |
| 7. நீர்ப்பாசனமுறை 'சி' .. | 448 | — | 448 | 249 | 701 |
| 8. நிலை I உம் II உம் .. | 306 | — | 306 | 317 | 2,084 |
| 9. ஏனையவை .. | 86 | — | 86 | 15 | 146 |
| மொத்தம் .. | 6,837 | — | 6,837 | 5,526 | 13,329 |

மூலம் : இலங்கை மகாவலி அபிவிருத்தி மேலாண்மைச் சபை

(அ) தற்காலிகமானவை

இரந்தெனிகல செயற்றிட்டத்தின் நீருக்கடியில் நீர் உட்புகாவண்ணம் அமைக்கப்படும் அணை, ஆற்றுத்திரும்பல் குடைவழி ஏனைய திருப்புதல்களுடன் தொடர்புற்ற வேலைகள் 1983இன் முற்பகுதியில் தொடங்கி 1983 இறுதியில் நிறைவு செய்யப்படும். இது விக்டோரியாவிலிருந்து ஏற்கனவே வெளியேறத் தொடங்கியிருக்கும் நீரை மேலும் ஒழுங்குபடுத்தும். 1982ஆம் ஆண்டின் இறுதிவரை இச்செயற்றிட்டத்தில் செலவிடப்பட்ட மொத்தச் செலவு ரூ 6,400 இலட்சங்களாக விளங்கியதுடன் இச்செலவுகளில் 84 சதவீதம் 1982இல் ஏற்பட்டது.

'எச்' பிரதேசத்தின் நில அபிவிருத்தியும், குடும்பங்களின் குடியேற்றமும் 1982இல் பெரும்பாலும் முற்றுப்பெற்றதுடன் 1982 இறுதியில் உள்ளவாறு 'எச்'

பிரதேசத்தில் குடியேற்றப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 22,564ஆக விளங்கியதுடன் இதில் 683 குடும்பங்கள் அல்லது 3 சதவீதம் இவ்வாண்டுக் காலத்தில் குடியேற்றப்பட்டனவாகும். முறை 'பி'யில் குடும்பங்களின் குடியேற்றம் 1982இல் தொடங்கப்பட்டதுடன் இவ்வாண்டுக்காலத்தில் 1050 குடும்பங்கள் இப் பிரதேசத்தில் குடியேற்றப்பட்டன. 1981இலிருந்து 5,456 குடும்பங்கள் முறை 'சி' இல் குடியேற்றப்பட்டதுடன் இதில் 2,400 குடும்பங்கள் 1982இல் குடியேற்றப் பட்டன, எனவே 1982 இறுதியில் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் எல்லாமாக ஏறத்தாள 29,070 குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.

அட்டவணை 1.28

மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புதிதாக பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு ('எச்' நிலப்பரப்பு)

எக்டேயர்கள்

| விடயம் | பெரும் போகம் 1978/79 | சிறு போகம் 1980 | மொத்தம் 1980 | பெரும் போகம் 1980/81 | சிறு போகம் 1981 | மொத்தம் 1981 | பெரும் போகம் 1981/82* | சிறு போகம் 1982* | மொத்தம் 1982* |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பயிர்ச்செய்யப்பட்ட நிலப்பரப்பு ... | 8,704 | 6,285 | 14,989 | 20,663 | 9,444 | 30,107 | 22,568 | 6,875 | 29,443 |
| (அ) நெல் ... | 8,704 | 4,842 | 13,546 | 20,663 | 6,923 | 27,586 | 20,680 | 2,522 | 23,202 |
| (ஆ) ஏனையபயிர்கள் | — | 1,443 | 1,443 | — | 2,521 | 2.521 | 1,888 | 4,353 | 6,241 |

*தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மகாவலி அபிவிருத்தி மேலாண்மைச சபை

1982ஆம் ஆண்டுப்பகுதியில் 'எச்' பிரதேசத்தில் ஏறத்தாள 29,443 எக்டேயர் பரப்பளவு பயிர்செய்யப்பட்டது. இதில் ஏறத்தாள 23,202 எக்டேயர்களில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்ட வேளையில் 6,241 எக்டேயர்களில் ஏனைய பயிர்களின் செய்கை மேற்கொள்ளப்பட்டது. 1982இன் சிறுபோகத்தில் நெற்பயிர்ச் செய் கையின் பரப்பளவில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு நீரைச்சிக்கனப்படுத்தும் நோக்கில் வேறு பயிர்களுக்கு மாறும்படி வேளாண்மையாளர்களை ஊக்குவிப்பதற்கு செயற் றிட்ட முகாமை அலுவலர்களால் மேற் கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த முயற்சியே பெரும்பாலும் காரணமாகும்.

## ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இலங்கையின் பிரதேச அபிவிருத்தியில் கூடியளவிற்கு சமன்பாட்டை அடைவதனை நோக்கிச் செய்யப்பட்ட ஒரு முயற்சியாகும். ஆகவே இத்திட்டம் உயர்ந்த முதலீட்டு வேளாண்மை நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து தற்பொழுது பெருமளவில் நன்மை யடையாத மாவட்டங்களை நோக்கித் திருப்பப்பட்டது. அத்தகைய ஒவ்வொரு

மாவட்டங்களினதும் தேவைகளை ஈடுசெய்யவும் குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை நிறைவேற்றுவதற்காக குறுங்கால, நீண்டகால நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்வதனையும் அதேபோன்று அம்மாவட்டங்களில் தற்போதுள்ள உள்ளமைப்புக்களை உறுப்படுத்துவதனையும் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் நோக்கங்களாகக் கொண்டுள்ளது. இச்செயற்றிட்டங்கள் கிராமியக் குடித்தொகையின் வருமானம் தொழில்வாய்ப்பு பொதுவான வாழ்க்கைத்தரம் போன்றவற்றை அதிகரிக்கும் எனவும் அதேபோன்று நாட்டின் வேளாண்மை அடிப்படையை விரிவாக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

முதலாவது கிராமஒருங்கிணைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் உலகவங்கியின் ஆதரவின்கீழ் 1979 இல் குருநாகல் மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டதிலிருந்து பல்வேறு பன்னாட்டு மூலங்களிலிருந்தான நிதியிடலுடன் ஏனைய பல மாவட்டங்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. 1982 இறுதியில் நாட்டின் ஏழுமாவட்டங்களை ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் உள்ளடக்கியிருந்தது. இவற்றில் மூன்று உலகவங்கிக்கடன்கள் மூலமும் ஏனைய நான்கும் அபிவிருத்திக்கான நோர்வே மக்களின் உதவி, சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம், நெதர்லாந்து அரசாங்கம் ஆகியவற்றிலிருந்தான கொடைகள் மூலமும் நிதியிடப்பட்டன. உலகவங்கியால் நிதியிடப்பட்ட இரண்டு புதிய கிராமிய ஒருங்கிணைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் 1983ஆம் ஆண்டில் மன்னார், வவுனியா மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குருநாகல் மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 1979 இல் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அதைத்தொடர்ந்து வந்த செயற்றிட்டங்களுக்கான மாதிரியாகவும் விளங்கியது. இது ஐந்தாண்டுகள் செயற்றிட்ட காலத்தை உள்ளடக்கத்தக்கதாக வடிவமைக்கப்பட்டது. செயற்றிட்டத்தின் மொத்தச்செலவு ரூ. 4650 இலட்சங்களாக மதிப்பிடப்பட்டிருப்பதுடன் இதில் ஏறத்தாழ 43சதவீதம் உலகவங்கி உதவியாக பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் நிதியிடலினூடாக வழங்கப்பட்டது. 1982 இறுதியில் செயற்றிட்டத்தின் மீதான செலவு ரூ. 2275இலட்சங்களாக அல்லது மதிப்பிடப்பட்ட செலவில் 49சதவீதமாக இருந்தது. 1982 ஆம் ஆண்டில் செயற்றிட்டத்தின் மீதான செலவினம் ரூ. 596 இலட்சமாகக் காணப்பட்டது. குருநாகல் மாவட்டத்திலுள்ள முதன்மைச் செயற்றிட்டங்கள் மாவட்டத்தின் இரண்டு முதன்மைப் பயிர்களான நெல்லுடனும், தெங்குடனும் இணைந்திருந்தன. நெல் உற்பத்தியை முன்னேற்றுவதற்கும், தெங்குப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்குமான நீர்ப்பாசன நீர் முகாமை 1982 இறுதிவரையான செலவினத்தில் முறையே 29சதவீத, 17சத வீதங்களுக்கும் வகைகூறின.

மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் 1979 இன் தொடக்கத்தில் தொடங்கியதுடன் அவற்றின் காலஎல்லை ஐந்து ஆண்டுகள் என மதிப்பிடப்பட்டது. இச்செயற்றிட்டங்கள் தொடர்ச்சியான வருடாந்த நிகழ்ச்சித்திட்ட அடிப்படையில் முறையே சுவீடன், பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, அபிவிருத்திக்கான நோர்வே

அட்டவணை 1.29

**ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மாவட்ட ரீதியான செலவினம் (1981 — 1982)**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மாவட்டம் | செலவு | | | நாளின்படி செலவினம் (ஒன்று சேர்ந்தது) | | 1981ஆம் ஆண்டில் செலவினம் | 1982ஆம் ஆண்டில் செலவினம் |
|---|---|---|---|---|---|---|---|
| | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | 1981 முடிவில் உள்ளபடி | 1982 முடிவில் உள்ளபடி | | |
| 1. குருநாகல் ... | 197.07 | 267.3 | 465.0 | 156.8 | 227.5 | 44.3 | 59.7 |
| 2. மாத்தறை ... | வி. கி. | வி. கி. | வி. கி. | 53.2 | 67.6 | 20.4 | 14.4 |
| 3. அம்பாந்தோட்டை ... | 147.3 | — | 147.3 | 39.0 | 56.7 | 25.3 | 17.6** |
| 4. நுவரெலியா (1980) ... | வி. கி. | வி. கி. | வி. கி. | 26.3 | 51.7 | 14.4 | 25.4 |
| 5. மாத்தளை* (1981) ... } | 265.3 | 514.9 | 780.2 | — | 76.4 | 37.7 | 38.6 |
| 6. புத்தளம்* (1981) ... } | | | | — | வி. கி. | 58.4 | 33.7 |
| 7. பதுளை (1982) ... | 112.0 | 257.5 | 369.5 | — | வி. கி. | — | வி. கி.† |

* மாத்தளை, புத்தளம் ஆகிய இரண்டு மாவட்டங்களையும் ஒரு செயற்றிட்டமாக உலக வங்கி இணைத்தமையால் இவ்விரண்டு மாவட்டங்களுக்குமான உள்நாட்டு/வெளிநாட்டுச் செலவுக் கூறுகள் ஒன்றாகக் கணிக்கப்பட்டது.

** நவெம்பர் 30ஆம் நாளில் உள்ளவாறு.

† 1982 யூலையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அடைப்புக் குறிப்புக்குள் இருக்கும் ஆண்டுகள் நடைமுறைப் படுத்தப்பட்ட ஆண்டைக் குறிக்கிறது.

மூலம்: திட்ட நடைமுறைப்படுத்தல் அமைச்சு

உதவியுடன் நிதியிடப்பட்டன. 1982 இறுதியில் மாத்தறை செயற்றிட்டத்தின் நடைமுறைப்படுத்தல் மீதான செலவினம் ரூ. 532 இலட்சங்களாக விளங்கியது. இம்மாவட்டத்தின் இரண்டு முன்னணி செயற்றிட்டங்களான தேயிலைச்சிறு உடைமையாளர்களின் அபிவிருத்தி, தெரு அபிவிருத்தி ஆகியவற்றிற்கு 1982 இறுதிவரையான மொத்த செலவினத்தில் முறையே 31சதவீதமும், 12சதவீதமும் ஒதுக்கப்பட்டன. மீளாய்விற்குரிய ஆண்டில் இச் செயற்றிட்டத்தின் மீதான செலவினம் ரூ. 144இலட்சங்களாக விளங்கியது. அம்பாந்தோட்டை மாவட்டத்தின் முன்னணி செயற்றிட்டங்களாக கிறமா ஓயா நீர்ப்பாசனத்திட்டத்தை மீளப்புதுப் பித்தலும் பெடிகமவின் பட்டுப்பூச்சி வளர்ப்பு செயற்றிட்டமும் விளங்கின. 1982 ஆம் ஆண்டில் ரூ. 176இலட்சம் செயற்றிட்டங்களின் மீது செலவிடப்பட்டதுடன் இச்செலவினத்தில் 11 சதவீதம் முன்னணிச் செயற்றிட்டங்களுக்காக ஒதுக்கப் பட்டது.

நுவரெலியா மாவட்டத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நெதர்லாந்து அரசிடமிருந்தான நிதியிடல் உதவியுடன் ஆண்டு நிகழ்ச்சித்திட்ட அடிப்படையில் 1980இல் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1982 இறுதியில் ரூ. 439 இலட்சம் செயற்றிட்டத்தின்மீது செலவிடப்பட்டது. முதன்மைச் செலவினக்கூறு களாக விலங்கு வளர்ப்பு அபிவிருத்தி, நீர்ப்பாசனத் திட்டங்களின் புத்தாக்கம், மீன் காடாக்கத்திற்கான நாற்றுமேடை அமைப்பு ஆகியன இருந்தன.

1981 இல் தொடங்கிய மாத்தளை, புத்தளம் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களும் உலகவங்கியின் நிதியிடலுடன் ஐந்து ஆண்டுகள் செயற்றிட்டக் காலத்தைக்கொண்டிருந்தன. இவ்விரண்டு செயற்றிட்டங்களினதும் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு முறையே ரூ. 3376 இலட்சமாகவும், ரூ. 3977 இலட்சமாகவும் விளங்கின. 1982 ஆம் ஆண்டில் இரண்டு செயற்றிட்டங்களுக்கு மான செலவினம் முறையே ரூ. 377இலட்சங்களாகவும் ரூ. 584இலட்சங்களாகவும் இருந்தன. மாத்தளைச் செயற்றிட்டம் ஏனைய விடயங்களுடன் மாவட்டத்திலுள்ள சிறு ஏற்றுமதிப்பயிர்களின் அபிவிருத்தியை முக்கியமாக வற்புறுத்தியது. புத்தளத் தின் முன்னணிச் செயற்றிட்டங்களில் ஒன்றான தெங்கு அபிவிருத்தியின் கீழ் ரூ. 195 இலட்சம் மீள் நன்னிலைப்படுத்தல் கீழ்ப்பயிரிடல், மீள் பயிரிடல், தெங்கு நிலங்களின் இடைப் பயிர்ச்செய்கை ஆகியவற்றின் மீது செயற்றிட்டக் காலப் பகுதியில் செலவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. இரண்டு மாவட்டங் களிலும் இம்மாவட்டங்களில் அரச வங்கிகளின் கடன் வழங்குகின்ற அளவினை விரிவாக்குவதற்கான வடிவமைப்பு அதே போன்றுநேர காலத்துடன் கடனை மீளச் செலுத்துவதனை ஊக்குவித்தல் ஆகியவற்றிற்காக வடிவமைக்கப்பட்ட வேளாண் மைக்கொடுகடன் துறையும் கணிசமானளவிற்கு வற்புறுத்தப்பட்டுள்ளது.

பதுளை மாவட்டத்தில் மிக அண்மைய ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் வேளாண்மை அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியம், சுவீடன் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு ஆகியவற்றின் நிதியிடலுடன் 1982 யூலையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆண்டு நிகழ்ச்சித்திட்ட அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட இச்செயற்றிட்டத்தின் மீதான மொத்தச் செலவினம் ரூ 3695இலட்சங்களென மதிப்பிடப்பட்டது. இதில் ஏறத்தாழ 70சதவீதம் வெளி நாட்டு நிதியிடலிருந்தும் பெறப்படும். இம்மாவட்டத்திலுள்ள தேயிலை சிறு உடைமையாளர் பயிர்ச்செய்கையின் அபிவிருத்திக்கும் இச் செயற்றிட்டத்தில் உயர்ந்த முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.